ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:


ஸ்ரீமதே ஸ்ரீவண்சடகோப ஸ்ரீவீரராகவ சடகோப

யதீந்த்ர மஹாதேசிகாய நம:

18197

# ஸ்ரீ அஹோபில க்ஷேத்ரமும்

# ஸ்ரீ அஹோபில மடமும்



திருவள்ளூர்

ஸ்ரீ மாலோலமுத்ராலயத்தில் அச்சிடப்பட்டது.


1955



ப்ரஹ்லாதவரதன்




(கீழ்) ந்ருஸிம்ஹன் (மூலபிம்பம்)



(கீழ்) கோயிலும் விமானங்களும்




பவநாசிநியின் ப்ரவாஹம் பைரவகுண்டத்தில் விழுகிறது



(மேல்) விமானமும் த்வஜஸ்தம்பமும்



மேல் அஹோபிலம் ந்ருஸிம்ஹமூர்த்திகள்



சீழஹோபிலம் புஷ்கரணி



மேலஹோபிலம், விமாநமும் த்வஜஸ்தம்பமும்,

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# ஸ்ரீ அஹோபிலமடமும் ஸ்ரீ அஹோபில க்ஷேத்ரமும்

## க்ஷேத்ரம் இருக்கும் இடமும் அதற்குச் செல்லும் மார்க்கமும்


ஸ்ரீ அஹோபிலக்ஷேத்திரம் கர்நூல் ஜில்லாவில் உள்ளது. மதராஸ்–பம்பாய் மார்க்கத்தில் கடப்பையில் இறங்கி பஸ் மார்க்கமாய்ச் செல்லவேண்டும். கர்நூலிலும் இறங்கி பஸ் மார்க்கமாகச் செல்லலாம். கடப்பையில் இறங்கி வருகிறவர்களுக்கு அநுகூலமாக ஸமீபகாலத்தில் கடப்பையில் மோசேன்பேட்டைத்தெருவில் ஒரு அஹோபிலமடம் ஸ்தாபிக்கப்பட்டு ஸ்ரீ ஆதிவண் சடகோபயதீந்த்ர மஹாதேசிகன் விக்ரஹமும் ப்ரதிஷ்டை செய்யப்பட்டு ஆராதனம் நடந்து வருகிறது யாத்ரிகர்கள் அவ்விடத்தில் ஒருவேளை தங்கி மோட்டாரில் ஆர்லகட்டா அல்லது போதனம் சென்று அங்கிருந்து வண்டிவழியாக அஹோபிலம் செல்லலாம்.

## க்ஷேத்திரத்தின் மஹிமை

இது புராணப்ரஸித்தமான ஸ்தலம். புராணத்தில் காசி, பிரயாகை முதலிய க்ஷேத்ரங்களைக்காட்டிலும் அஹோபிலம் உயர்ந்ததென்றும், ஒரு நாள் அஹோபிலத்தில் வசிப்பது அநேகவர்ஷகாலம் ப்ரயாகைமுதலிய க்ஷேத்திரங்களில் வசிப்பதற்கு ஒப்பாகும் என்றும். அஹோபிலத்தில் செய்யும் தானம் அணு மாத்ரமாக இருந்தாலும் மேருவிற்கு ஒப்பாகுமென்றும், அங்கு ஒரு ப்ராஹ்மணனுக்கு போஜநம் செய்துவைத்தால் அநேகாயிரம் ப்ராஹ்மணர்களுக்கு புண்ய க்ஷேத்ரங்களில் போஜநம் செய்விப்பதற்குஒப்பாகுமென்றும்

சொல்லப்பட்டிருக்கிறது. வைஷ்ணவ க்ஷேத்திரங்களில் ஆழ்வார்களால் பாடப்பட்ட ஸ்தலம் உயர்ந்தது. திருமங்கை மன்னன் இந்த அஹோபில க்ஷேத்ரத்தை உத்தேசித்து அங்குள்ள பர்வதத்தையே "அங்கண் ஞால" மென்று தொடங்கி பத்துப் பாசுரங்களால் பாடியிருக்கிறார்.

அஹோபில க்ஷேத்ரத்தில் ஒன்பது நரஸிம்ஹமூர்த்திகள் தனித்தனியாகக் கோயில்கொண்டு விளங்குகிறார்கள். "ஜ்வாலா, அஹோபில, மாலோல க்ரோட, காரஞ்ச, பார்கவா: | யோகாநந்தச், சத்ரவட: பாவநா நவ மூர்த்தய:" என்று ஒன்பது மூர்த்திகளுக்கும் புராணத்தில் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. பவநாசினீ என்கிற நதி பர்வதத்தைச் சுற்றி ப்ரவஹிக்கிறது. மலைபடி வாரத்தில் (கீழ் அஹோபிலத்தில்) பெரியதாகக் கோயிலிருக்கிறது. மலைமேல் ஐந்து அல்லது ஆறு மைல் சென்றால் மேல் அஹோ




கீழஹோபிலம் விமானமும் கோயிலும்.



மேலஹோபிலம் த்வஜஸ்தம்பம்.

பிலம் கோயில் இருக்கிறது. போகும் மார்க்கங்களிலெல்லாம் விசேஷ மண்டபங்களும், கோபுரங்களும், ப்ராகாரங்களும் தென்படுகின்றன. இவைகளைப்பார்த்தால் ஒரு காலவிசேஷத்தில் ரொம்பவும் உயர்ந்த முறையில் பக்தி சிரத்தையுடன் மஹாராஜாக்களால் அவ்வப்போது வேண்டிய திருப்



பணிகளையும் செய்து விசேஷ உத்ஸவங்களுடன் நன்றாகப் பரிபாலிக்கப்பட்டுவந்ததாகத் தெரிகிறது. அப்பொழுது இது சிறந்த ராஜதானியாகக் கூட விளங்கியதாகத் தெரிகிறது. அந்த ராஜாக்களது ஆளுகை மாறினதுமுதல் அழிய ஆரம்பித்ததாகத் தெரிகிறது. மேற்படி க்ஷேத்ரங்களில் உள்ள மூர்த்திகளெல்லாம் நரஸிம்ஹமூர்த்திகளே. அவதாரங்களில் ராம, க்ருஷ்ணவதாரங்கள் மனுஷ்யாவதாரங்களாகவே இருக்கின்றன. நரமும் சிங்கமும் கலந்த அவதாரம் நரஸிம்ஹாவதாரம். அவதரிக்கும்போதே பக்தனுக்குத் தீங்கு விளைவிக்க ஆரம்பித்தவனை ஸம்ஹரித்த அவதாரம் ஆகையால் பக்தர்களின் இடையூறுகளைப் போக்குவதில்தனக்குள்ள த்வரையை உலகத்துக்கு நன்றாக வெளிப்படுத்திய அவதாரம்.

## பெருமாளின் மஹிமை.

ஸ்ரீ ரங்கநாதனை விபவத்தில் இக்ஷ்வாகு வம்சத்தில் அவதரித்த ஸ்ரீ ராமனால் ஆராதிக்கப்பட்டதைக் கொண்டு பகவானான ஸ்ரீ ராமனுக்கும் பெருமாளானபடியால் பெரிய பெருமாளென்று ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாயத்தில் வ்யவஹரித்து வருகிறார்கள். அப்படியே ஸ்ரீ அஹோபிலத்து எம்பெருமானையும் ஸ்ரீராமன் வனவாஸகாலத்தில் பஞ்சாம்ருத ஸ்தோத்ரம் செய்து துதித்தார் என்று சேஷதர்மத்திலும், அர்ச்சாவதாரத்தில் கலியுகத்தில் ப்ரத்யக்ஷ வரப்ரஸாதியாகக் கொண்டாடப்பட்டுவரும் திருமலை ஸ்ரீநிவாஸப்பெரு



கீழஹோபிலம் நூற்றுக்கால்மண்டபம்.

மாளும் பத்மாவதியை பாணிக்ரஹணம் செய்து கொள்ளும் பொழுது இந்த மலையிலுள்ள சிங்கப்பிரானை ஆராதித்து விவாஹம் செய்துகொண்டதாக ஸ்ரீ வெங்கடாசலமாஹாத்ம்யத்திலும் கூறியிருப்பதால் விபவத்தில் ஸ்ரீ ராமனாகிய பெருமாளுக்கும் அர்ச்சையில் ஸ்ரீநிவாஸனாகிய பெருமா



சத்ரவடந்ருஸிம்ஹன்.

னுக்கும் பெருமாளாக இருந்தபடியால் இவரையும் பெரிய பெருமாள் என்று வ்யவஹரித்து வருகிறார்கள். ஸ்ரீ ந்ருஸிம்ஹ மந்த்ரத்திலும் மஹாவிஷ்ணுவென்கிற பதத்துக்கும் இந்த ஐதிஹ்யம் பொருந்தியிருக்கிறதென்றும் சமயமறிந்த

வர்களின் வார்த்தை. இவ்விடத்தில் மாசி மாதம் பௌர்ணமியில் தீர்த்தவாரி நடக்கிறது. அதற்கு முன் பத்து நாட்கள் மேல்அஹோபிலத்திலும் கீழ் அஹோபிலத்திலும் ப்ரஹ்மோத்ஸவங்கள் நடந்து வருகின்றன.

## ஸ்ரீ அஹோபிலமடத்தின் வரலாறு.

ஸ்ரீ வைஷ்ணவமதத்தில் விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயத்தை ஸ்ரீமந் நாதமுனிகள், ஸ்ரீ ஆளவந்தார் இவர்களுக்குப் பிறகு உலகத்தில் வெகுவிதமாக ப்ரசாரம் செய்தவர் ஸ்ரீ பகவத்ராமானுஜாசாரியர். ஆகையினால்தான் அந்த ஸித்தாந்தத்திற்கு ஸ்ரீ பகவத்ராமானுஜஸித்தாந்தம் என்ற பெயர் வந்தது. ஸ்ரீ பகவத்ராமானுஜர் பல க்ரந்தங்கள் மூலமாகவும், உபதேசங்கள் மூலமாகவும் ப்ரசாரம் செய்ததோடு நில்லாமல் பண்டித பாமரர்கள் உள்பட அனைவரும் உஜ்ஜீவிக்கும்படி எல்லாரும் அதை அநுஸரிக்க வேண்டியதற்காக ஆங்காங்குள்ள வைஷ்ணவக்ஷேத்ரங்களில் ஒரு கோஷ்டியாக இருந்து வேதங்களையும், வேதங்களின் ஸாரங்களான ஆழ்வார்களால் அருளிச்செய்யப்பட்ட ப்ரபந்தங்களையும் (தமிழ் வேதங்களையும்) அநுஸந்திக்கும்படியும், உத்ஸவகாலங்களில் திருவீதிகளில் பெருமாளுக்கு முன்பும் பின்புமாக அநுஸந்திக்கும்படியும் மற்றும் பல ஸமயங்களில் அநுஸந்திக்கும்படியும் ஏற்பாடு செய்தார். அவைகளினால்தான் ஸம்ப்ரதாயம் பொலிவும் செழிப்புற்றது. அந்த மாதிரி எல்லா வைஷ்ணவஸ்தலங்களிலும் ஏற்பாடு செய்து, தாம் நிரந்தரமாக ஸ்ரீரங்கத்திலேயே இருந்து கொண்டு அவ்விடத்தில் பொலிவும் செழிப்புமாக ஸம்ப்ரதாயத்தை வ்ருத்தி செய்தருளினார். பிறகு ஸ்ரீ வேதாந்ததேசிகன் தமது காலத்தில் க்ரந்தமுகமாகப் பரவச் செய்ததில் ஏற்பட்ட வாதங்களுக்குப் பரிஹாரங்களை க்ரந்தங்கள் மூலமாகச் செய்தும், உபதேசத்தில் வந்த அர்த்தங்களை நன்றாக நிலைநாட்ட வேண்டியதற்காக ரஹஸ்யக்ரந்தங்களையும் செய்து



ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகன்.

ச்ரந்தத்தாலும், உபதேசத்தாலும் ஸ்ரீ பகவத்ராமாநுஜர் செய்த உபகாரத்தை விஸ்தாரப்படுத்தி நிலை நாட்டினர்: இவைகளெல்லாம் ஸர்வேச்வரன் அவ்வப்போது அவரவர்கள் மூலம் லோகத்தார் உஜ்ஜீவிக்கச் செய்யும் வ்யாபாரங்கள். கீழ்ச்சொன்ன ரீதியிலும் வெகு ஜனங்கள் உஜ்ஜீவிக்கும் ஸந்தர்ப்பம் இல்லாதிருப்பதை நினைத்துத் தானே அவர்களிருப்பிடம் சென்று அவர்களை உஜ்ஜீவிக்கச் செய்யவேண்டுமென்று ஸங்கல்பித்துக்கொண்டான் போலும்.



## ஸ்ரீமதாதி வண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகன்.

ஸ்ரீ பகவத் ராமாநுஜன் விஜய ஸ்தான மென்றும், தக்ஷிண பதரிகாச்ரமம் என்றும் சொல்லப்படுகிற மேல் கோட்டை நாராயண கிரியில் பகவத்ராமாநுஜ ஸித்தாந்தத் திலும், ஆழ்வாருளிச்செயலிலும் நிஷ்ணாதரான ஸ்ரீ கேசவாசார்யருக்கு ஸ்ரீநிவாஸாசாரியர் என்கிற குமாரர் அவதரித்தார். முன் ஸ்ரீ பகவத்ராமாநுஜனைக் கொண்டு லோகோஜ்ஜீவநம் செய்தமாதிரி இவரைக்கொண்டு உடனே லோகோஜ்ஜீவநம் செய்யத் திருவுள்ளம் பற்றி அவருடைய ப்ரஹ்மசர்யாச்ரமத்தில் குருவினிடத்தில் எல்லாவித்யைகளை

யும் அப்யஸித்துமுடிந்ததுமே அவர்க்ருஹஸ்தாச்ரமத்தைப் பெற்று பிறகு ஸந்யாஸாச்ரமத்தைப்பெறும்படியான விளம்பத்தை வைத்துக்கொள்ளாமல் உடனே அவருக்கு துரீயாச்ரமத்தைக்கொடுத்துஸித்தாந்தப்ரவசநத்தை செய்யவேண்டுமென்று ஸ்ரீ ந்ருஸிம்ஹன் ஸங்கல்பித்தவனாய் ஸ்வப்நத்தில், அஹோபிலத்தில் வந்து தம்மைத் திருவடித் தொழுமாறு இவ்வாசார்யோத்தமனை நியமித்தான். ஆசார்ய நியமனம் பெற்று அவரும் சீக்கிரமாக அஹோபிலமெழுந்தருளினர். ஸர்வேச்வரனும் தேசாதிபதிக்கும், வரும் மஹானை எதிர் கொண்டழைத்து அவர் திருவடிகளை ஆச்ரயிப்பதுடன் தம்மையும் ஒப்புவித்து சர்வாதிகாரத்தையும் அவரிடம் ஒப்புவிக்கும்படி நியமித்தருளினன், அதேமாதிரி இந்த தேசாதிபதியும் இவருடைய தோற்றத்தில் பராஜிதனாய் எம்பெருமான் நியமித்தபடி நடந்துகொண்டான். பிறவி முதலிலேயே ஆழ்வார்மாதிரி வைராக்யநிதியான அந்த மஹானுக்குப் பெருமாள் (ஸ்ரீ ந்ருஸிம்ஹன்) ஒரு ஸந்யாஸி ரூபத்தில் தோன்றி ப்ரேஷமந்த்ரத்தையும் உபதேசித்து ஸந்யாஸாச்ரமத்தையும் கொடுத்தருளினர். அதன்பேரில் பெரிய பெருமாளான ஸ்ரீ ந்ருஸிம்ஹனும் தம்மை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு தேசாடநம்செய்து அவரவர் இல்லங்களிலும், அவரவர்களுடைய ப்ரார்த்தனைக் கிணங்க அங்கங்கே எழுந்தருளப்பண்ணி ஆராதித்து ஸமாச்ரயணம் காலக்ஷேபம், பரந்யாஸம் முதலியதுகளைச்செய்து லோகத்தை உஜ்ஜீவிக்கச் செய்ய வேணுமென்று நியமித்ததை சிரஸா வஹித்து செல்வப்பிள்ளை ஸ்ரீ பாஷ்யகாரரிடம் தாமேவந்து சேர்ந்தாற்போல் ஒன்பது மூர்த்திகளில் தம்மிடம் அதே மாதிரி க்ருபையால் வந்த மலோல மூர்த்தியை (ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை) எழுந்தருப்பண்ணிக் கொண்டு ஸஞ்சாரத்திற்கு வேண்டியதான பரிஜன பரிச்சதங்களுடன் முகுந்த தேவராயன் என்கிற அந்த தேசாதிபதியால் தமக்காகத் தம்முடைய ஸஞ்சாரத்திற்காக ப்ரார்த்தித்து ஸமர்ப்பிக்கப்

பட்ட சிபிகையில் அவருடைய ப்ரார்த்தனைக்கிணங்க அவன் ப்ரதானனாக எழுந்தருளப்பண்ண அதிலமர்ந்து பெருமாளுக்கு அநுயாத்ரையாக பெருமாளுடன் ஸஞ்சாரம் செய்ய ஆரம்பித்தார். அஹோபிலத்திலும் முன்போல் திருவாராதனாதிகள் ஸரிவர நடக்கும்படி ஏற்பாடுகள் செய்துவிட்டு எழுந்தருளினார். அது முதல் அந்த தேவஸ்தான நிர்வாஹம் ஸ்ரீ அஹோபிலமடத்தின் கீழ் வந்துகொண்டிருக்கிறது. இம் மஹான் அநேக சிஷ்ய வர்க்கங்களை அநேக இடங்களுக்கு ஸஞ்சாரம் செய்து உஜ்ஜீவிப்பித்தார். அஹோபிலத்திலிருந்து ஸஞ்சாரம் ஆரம்பித்தபடியால் 'ஸ்ரீ அஹோபிலமடம்' என்றும், 'ஸ்ரீ அஹோபிலமடாதிபதி' என்றும் பெயர் வழங்கலாயிற்று. இந்தமஹான் குடும்பமே ஆழ்வார் ஸ்ரீஸூக்தியில் ஈடுபட்டிருப்பதையும், பிறவி முதல் இவருக்குள்ள வைராக்கியத்தையும் உத்தேசித்து ஸ்ரீ சடகோபஜீயர்என்றுஸன்யாஸாச்ரமத்தில்பெயர்வந்தது. தமக்கு ஆழ்வாரிடத்திலுள்ள பக்திப்பெருக்கால் தத்காலம் காலக்ஷேபத்தால் ஆழ்வாருடைய மூர்த்தி கோயிலைவிட்டு வெளியேறியிருப்பதை மறுபடி கோயிலுக்குள் வைத்து ப்ரதிஷ்டை செய்யவேண்டியதை உத்தேசித்து ஆழ்வார் திருநகரிக்கு எழுந்தருளி மதுரகவிகளைப்போல் கண்ணிநுண் சிறுதாம்பினால் ஆழ்வார் எழுந்தருளி இருக்கும் சுனையின் கரையில் ஸ்தோத்ரம் செய்ய, சுனை உள்ளிருந்து ஆழ்வார் மிதந்து தம்மிடம் வர, தம்மிடம் ஆச்ரயித்த தேசாதிபதியின் உதவியைக்கொண்டு ஆழ்வாரை முன்போல் ப்ரதிஷ்டை செய்வித்தார். ஆழ்வாரை லோகோஜ்ஜீவநத்திற்கு முன்போல் ப்ரதிஷ்டை செய்வித்த ஔதார்யத்தை நினைத்து வண்சடகோபஜீய ரென்று அவருக்குத் திருநாமம் வழங்கலாயிற்று. 'வண்' என்றால் உதாரர் என்று அர்த்தம். அந்த திவ்யதேசத்து எம்பெருமானான ஸ்ரீ ஆதிநாதனுக்கும் ப்ரதிஷ்டைகளைப் பண்ணிவைத்து ஆதிநாதனுடை

யவும் ஆழ்வாருடையவும் உத்ஸவங்கள் ஸரிவர நடக்கும்படி ஸந்நிதி நிர்வாஹத்தை யேற்றுக்கொண்டு நன்றாக நடத்தி வந்தபடியால் பெருமாள் திருநாமமான 'ஆதிநாதன்' என்பதில் ஆதி என்கிற பதத்தையும் இருவருடைய திருநாமத்திற்கு முன் சேர்த்து ஆதிவண்சடகோபஜீயரென்று திருநாமம் ப்ரஸித்தமாயிற்று. இங்க ஆஸ்தாநத்தில் வருகிறவர்கள் எல்லாம் அந்த மஹானின் அநுக்ரஹத்தினாலேயே வருகிறார்களாதலால் வண்சடகோப என்கிற பிருது அவர்கள் பெயருக்கு முன்னாலேயும் பின்னாடி சடகோப என்கிற பெயரும் வழங்கப்பட்டு வருகிறது. அதாவது—முன்னாடி வண்சடகோபனென்றும் பின்னாடி சடகோப என்று வைத்தும் நடுவில் புதுப் பெயர் வைத்தும் வழங்கப்பட்டு வருகிறது. எல்லாரும் ஒரே ரீதியில் ஸ்ரீசடகோப ஸ்ரீ: என்று வைதிகலௌகிகவ்யவஹாரங்களில் திருவக்ஷரம்(கையெழுத்து) செய்வது வழக்கமாக இருக்கிறது. இவ்வளவு ப்ரபாவமுள்ள மஹான் தேசம் முழுவதும் ஸஞ்சாரம் செய்து ஆங்காங்கு திவ்யதேசங்களில் மண்டப ப்ராகார கோபுராதிகளை நிர்மாணம் செய்து ஆழ்வார் தேசிகன் முதலானவர்களின் விக்ரஹங்களை ப்ரதிஷ்டை செய்வித்துக்கொண்டு கோயில் உத்ஸவாதிகள் ஸரியாக நடக்கும்படி அந்தந்த தேசாதிபதிகளுக்கு நியமநம் செய்து, ஸமாச்ரயணம் முதலியதுகளால் சிஷ்யர்களை உஜ்ஜீவிக்கப்பண்ணி 60 சதுர்மாஸ்யம் எழுந்தருளியிருந்தார் மேல்கோட்டை நாராயணகிரியில் அவருடைய ப்ருந்தாவநம் இருக்கிறது. அந்த ப்ருந்தாவநம் ஸமீபகாலத்தில் ஜீர்ணோத்தாரணம் செய்யப்பட்டு அம் மஹானுடைய திவ்யமங்கள விக்ரஹப்ரதிஷ்டையும் செய்யப்பட்டிருக்கிறது, அம்மஹானின் நியமநத்தின்பேரில் அவருடையஸ்தானத்தில் 2-வது பட்டத்தில் ஸ்ரீநாராயணயதீந்த்ரமஹாதேசிகன் என்கிற திருநாமத்துடன் எழுந்தருளினஸ்வாமியும்ஸ்வாசார்யன் செய்தமாதிரி தாமும் லோகோஜ்ஜீவநம் செய்தருளினார். அவருடைய ப்ருந்தாவநமும் திருநாராயணபுரத்தில் ஆசார்

யன் ப்ருந்தாவநத்தின் பக்கத்தில் அமைந்திருக்கிறது. அதுவும் ஸமீபகாலத்தில் ஜீர்ணோத்தாரணம் செய்யப்பட்டு அவருடைய திவ்யமங்கள விக்ரஹமும் ப்ரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. இப்படி பெரிய பெருமாளான லக்ஷ்மீந்ருஸிம்ஹனால் ஸ்ரீ ஆதிவண்சடகோபஜீயரை (மஹாதேசிகரை)க் கொண்டு ப்ரவர்த்திக்கப்பட்ட ஸ்ரீ பகவத்ராமாநுஜஸித்தாந்தமானது அந்த மஹானின் அநுக்ரஹத்தால் அவ்வப்போது இந்த ஸ்தானத்திற்கு வரும் அவருடைய அபராவதாரங்களானவர்களும், ஸ்ரீந்ருஸிம்ஹனுடைய அநுக்ரஹத்திற்குப் பாத்ரமானவர்களும், ஸ்ரீ அழகியசிங்கர் என்று வ்யவஹரிக்கப்படுபவர்களுமான யதீச்வரர்களால் அவிச்சின்னமாக உலகத்தில் ப்ரசாரம் செய்யப்பட்டு பரவி வருகிறது.

"யத்கடாக்ஷேண ஸர்வேபி யத்ஸ்தாநாகத யோகிந:।
ஸ்ரீ ந்ருஸிம்ஹ தயா பூர்ணாஸ்தந்முநேர் மங்களம் ஸதா॥"

என்று அனுஸந்தித்து வருகிறார்கள்.

## ஸ்ரீ அஹோபிலமடத்தில் தத்காலம் மடாதிபதியாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகியசிங்கர்.

இப்படி அவிச்சின்னமாக ப்ரவர்த்தித்து வரும் ஸ்ரீ அஹோபிலமடத்துப் பரம்பரையில் அந்தந்த காலங்களில் எழுந்தருளியிருந்த ஆஸ்தானாதிபதிகளின் அஸாதாரண மஹிமையினால் செய்யப்பட்ட அபூர்வமான கார்யங்கள் பல உள. அவைகள் அவர்கள் சரித்திரங்களில் விசேஷமாய் எழுதப்பட்டிருக்கின்றன. தற்காலம் இந்த ஆஸ்தானத்தில் எழுந்தருளியிருப்பவர் ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீ வீரராகவசடகோபயதீந்த்ர மஹாதேசிகன். இவர் 40-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீ ரங்கநாதசடகோப யதீந்த்ரமஹாதேசிகனிடம் ஸ்ரீபாஷ்ய ரஹஸ்யாதிகளையும், அவருக்கடுத்த பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ லக்ஷ்மீந்ரு

ஸிம்ஹ சடகோபயதீந்த்ரமஹாதேசிகனிடத்தில் ச்ருதப்ரகாசிகா, கீதாபாஷ்ய பகவத் விஷயாதிகளையும் அப்யஸித்து அந்த மஹானின் அநுக்ரஹத்தால் பெருமாள் திருவடிகளில் பரத்தை ஸமர்ப்பித்து மந்த்ரோபதேசம் பெற்றுக்கொண்டு 42-வது பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ஸ்ரீ ரங்கசடகோப யதீந்த்ர மஹாதேசிகன் ஸன்னிதியில் ஸந்யாஸாச்ரமம் பெற்று அவருடனே ஸுமார் இரண்டு வருஷ காலம் கூட இருந்து நல்வார்த்தைகளையும் கேட்டு அவருடைய நியமனத்தின்பேரில் ஸ்ரீ மாலோலனுக்கு நித்யாராதனாதிகளையும் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

இவர் சோழ தேசத்திலும் தொண்டை மண்டலத்திலும் ப்ரஸித்தமான குலத்தில் பிறந்தவர். பரமைகாந்தி ஸார்வபௌமரான இவருடைய பிதா இவருக்கு பகவந்நியமனத்தின் பேரில் (பெருமாளுடைய) லக்ஷ்மீந்ருஸிம்ஹன் என்கிற திருநாமத்தை வைத்து யதாகாலம் உபநயனம், வேத சாஸ்த்ராப்யாஸம், ஸதாசார்யஸமாச்ரயணம் முதலியவைகளைச் செய்துவைத்து நல்ல வழியில் பழக்கி வைத்திருந்தார். பித்ருவாக்யாநுஸாரியாய் க்ருஹஸ்தாச்ரமியாய் குலக்ரமாகதமான கண்ணன் திருவாராதனத்தைச் செய்துகொண்டு க்ரந்தப்ரவசநம் செய்துகொண்டுவந்தார். பிதாவின் பரமபதப்ராப்திக்குப் பிறகு 10 வருஷகாலம் க்ருஹஸ்தாச்ரமத்திலேயே தம் முன்னோர் நடந்துவந்த அடிச்சுவட்டையநுஸரித்துநடந்துவந்தார். பின்பு 42-வது பட்டம் ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோப யதீந்த்ரமஹாதேசிகன் நியமனத்தைப்பல நிமித்தங்களையும் உபபத்திகளையும் கொண்டு ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனின் நியமனமும் அதுவேயாக நிச்சயித்து அந்நியமனத்தைத் தட்டாமல் ஸந்யாஸாச்ரமத்தை ஸ்வீகரித்து இரண்டு வருஷ காலம் ஆசார்யனுடன் பகவத் கைங்கர்யம் செய்து வந்தார். நடந்த நந்தன ௵ மாசி மாதத்தில் 42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் தன்னடிச்சோதிக்கு எழுந்தருள, அவருடைய கைங்கர்யங்களை

யும் நன்றாகச் செய்து ப்ருந்தாவனத்தையும் விக்ரஹப்ரதிஷ்டையையும் செய்வித்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து முன் ஆசார்யர்கள் செய்தபடி ஆதி நியமனப்ரகாரம்லோகோஜ்ஜீவனம் செய்யவேண்டியதற்காக ஸ்ரீமாலோலனுடன் ஸஞ்சாரமாக எழுந்தருள ஆரம்பித்தார். ஸஞ்சாரத்தில் ஸதாசாரஸ்தாபனத்தை முக்கிய நோக்கமாகக்கொண்டு ஆங்காங்கு அதைவிசேஷமாக உபந்யஸித்துக்கொண்டு ஸமாச்ரயண, காலக்ஷேப, பரந்யாஸாதிகளையும் செய்துகொண்டு ஸ்ரீ அஹோபிலத்திற்கெழுந்தருளிஅவ்விடம் திருக்கோயில் கொண்டுள்ள நவந்ருஸிம்ஹர்களையும் மங்களாசாஸனம் பண்ணினார். அங்கேயே சாதுர்மாஸ்யஸங்கல்பத்தை நடத்தினார். உத்தான காலத்தில் அவ்விடத்திலிருந்து புறப்பட்டு விஜய வருஷ ஐப்பசி மாதத்தில் பெங்களூருக்கு எழுந்தருளினார். அவ்விடம் பொதுமக்களாலும் அரசாங்கத்தாராலும் மிகுந்த உத்ஸாஹத்துடன் நன்கு வரவேற்கப்பட்டார். அங்கிருந்து மைஸூர் எழுந்தருளி மஹாராஜாவினால் ஆராதிக்கப்பட்டார். மைஸூருக்கு பெருமாள் எழுந்தருளி 90வருஷத்திற்குமேல் ஆகிறபடியால் மைஸூர் ஜநங்களும் மஹாராஜாவும் வெகுஉத்ஸாஹத்துடனுபசரித்து ஆதரித்தார்கள். அங்கிருந்து திருநாராயணபுரம் எழுந்தருளி திருநாராயணனை மங்களாசாஸனம் செய்துகொண்டு ஸுமார் 1 மாத காலம் அவ்விடத்திலேயே எழுந்தருளியிருந்தார். அப்பொழுது ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகன் ப்ருந்தாவனத்தில் திவ்யமங்களவிக்ரஹப்ரதிஷ்டை செய்தாயிற்று. பிறகு மலையாள திவ்யதேசங்களை மங்களாசாஸனம் செய்துகொண்டு திருவனந்தபுரத்திற்கு எழுந்தருளியாயிற்று. அங்கு திருவனந்தபுரத்து ப்ரஜைகளாலும் மஹாராஜாவினாலும் பக்தியோடும் ப்ரீதியோடும் வெகு விமரிசையாக ஆராதிக்கப்பட்டார். அங்கிருந்து திருக்குறுங்குடிக்கெழுந்தருளி எம்பெருமானை மங்களாசாஸனம் பண்ணி, நாங்கூனேரியில் பெருமாளை மங்களாசாஸ

னம் செய்துகொண்டு ஆழ்வார் திருநகரிக்கு எழுந்தருளினார். அங்கு பெருமாளையும் நம்மாழ்வாரையும் மங்களாசாஸனம் செய்து விசேஷ மரியாதைகளுடன் ஆராதிக்கப்பட்டு நவ திருப்பதிக்கெழுந்தருளி அவ்வெம்பெருமான்களை மங்களாசாஸனம் செய்தருளினார். அங்கிருந்து தாம்ப்ரபர்ணீ நதி தீரத்திலுள்ள சிஷ்யகோடிகளின் ப்ரார்த்தனைக்கிணங்க அத் தேசத்தில் ஸஞ்சாரத்தை இனிது நடத்தினார்.

தாம்ரபர்ணீ தீரத்திலுள்ள காருக்குறிச்சி என்ற அக்ரஹாரம் ஸ்ரீமதஹோபிலமடத்தில் 40-வது 41-வது பட்டங்களையலங்கரித்த ஸ்ரீமதழகியசிங்கர்களான ஸ்ரீவண் சடகோப ஸ்ரீரங்கநாதசடகோபயதீந்த்ர மஹாதேசிகனும், ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹசடகோப யதீந்த்ர மஹாதேசிகனும் அவதரித்த புண்யஸ்தலமானபடியாலே அவ்விடத்திற்கு எழுந்தருளினார். பிறகு ஸ்ரீவில்லிபுத்தூருக்கெழுந்தருளி ஆண்டாளையும் ரங்கமன்னாரையும் மங்களாசாஸனம் செய்தருளினார். அங்கிருந்து ஸஞ்சாரக்ரமமாய் எழுந்தருளும் மார்க்கத்தில் விஸலூர் என்னும் அக்ரஹாரத்தில் உள்ள ஆலயத்தில் ஸ்ரீமதாதிவண்சட-கோப யதீந்த்ர மஹாதேசிகனை ப்ரதிஷ்டைசெய்தருளினார். பிறகு மதுரைக்கு எழுந்தருளி சிலநாட்கள் அங்கே தங்கியிருந்தார். மதுரையில் விசேஷமாக வரவேற்பளிக்கப்பட்டதுடன் அதிவிமர்சையாக பட்டணப்ரவேசமும் ஸ்ரீமதழகியசிங்கருக்கு நடந்தது.

மதுரையிலிருந்துபுறப்பட்ட ஸ்ரீமதழகியசிங்கர் வைகையாற்றங்கரையிலுள்ள துவரிமான் என்ற அழகான அக்ரஹாரத்திற்கு எழுந்தருளினார். இந்தஸ்தலத்தில்தான் ஸ்ரீமதஹோபிலமடம் 40.வது பட்டம் ஸ்ரீமதழகியசிங்கரின் ப்ருந்தாவநமிருக்கிறது. ஸ்ரீமதழகியசிங்கர் ஜய வருஷத்திய சாதுர்மாஸ்யஸங்கல்பத்தை இவ்வூரிலேயே நடத்

தியாயிற்று. ஸங்கல்பகாலம் முடிந்ததும் உத்தானத்திற்கு மதுரைக்கெழுந்தருளி, பிறகு பரமக்குடி, ராமநாதபுரம் மார்க்கமாகத் திருப்புல்லாணி என்ற ஆதிஸேதுக்கெழுந்தருளியாயிற்று. அங்கு தர்ப்பசயனத்திலுள்ள ஸ்ரீராமபிரானை மங்களாசாஸனம் செய்தாயிற்று. இந்த ஸஞ்சாரத்துடன் ஸ்ரீமதழகியசிங்கர் பாரதநாட்டின் தென்பாகத்திலுள்ள ஸ்ரீ அஹோபிலக்ஷேத்ரம்முதல் தென்கோடிவரையிலுள்ள எல்லா ப்ரதேசங்களிலும் ஸஞ்சாரம் செய்தருளி சிஷ்யர்களையும், பக்தர்களையும் அனுக்ரஹித்தாயிற்று.

அவ்விடமிருந்து தேவகோட்டை, காரைக்குடி வழியாக திருக்கோட்டியூருக்கு எழுந்தருளியாயிற்று. ஸ்ரீவைஷ்ணவ சரித்ரத்தில் ப்ரஸித்திபெற்ற திருக்கோட்டியூரில் ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகன் ஸந்நிதியை ஸ்ரீமதஹோபில மடத்தின் நிர்வாஹத்தில் ஏற்றுக்கொண்டாயிற்று. இங்கிருந்து புதுக்கோட்டைவழியாக ஸ்ரீரங்கம் தசாவதார ஸந்நிதிக்கு எழுந்தருளியாயிற்று. ஸுமார் 10 வருஷங்களுக்குப்பின் ஸ்ரீந்ருஸிம்ஹன் இப்பொழுதுதான் இங்கு எழுந்தருளத் திருவுள்ளங்கொண்டான்போலும். இவ்விடத்தில் ஸ்ரீமதஹோபிலமடத்தில் 41-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹசடகோப யதீந்த்ர மஹாதேசிகனின் ப்ருந்தாவநம் இருக்கிறது. ஆகையால் இவ்வருஷம் (ஜய) 41-வது பட்டம் ஸ்ரீமதழகியசிங்கரின் வார்ஷிகாராதனத்தை இவ்வூரில் நடத்தவேண்டுமென்றே ஸ்ரீமதழகியசிங்கர் இங்கு

எழுந்தருளியாயிற்று. அவ்வமயம் 41–42-பட்டம் ஸ்ரீமதழகியசிங்கர்களின் பழைய ஆச்ரமங்களைப் புதுப்பிக்கும்படி ஸ்ரீ நியமனமாகி, ஒருவாரத்தில் புதுப்பிக்கப்பட்டன.

ஸ்ரீமதழகியசிங்கர் அங்கிருந்து திருப்பளாத்துறை, மருதூர், குளித்தலை, கரூர், நாமக்கல் வழியாக சேலத்திற்கு எழுந்தருளியாயிற்று. அங்கே ஸ்ரீமதழகியசிங்கரின் திருநக்ஷத்ரமஹோத்ஸவமும், மறுநாள் 34-வது பட்டம் (அத்திப்பட்டு) ஸ்ரீமதழகியசிங்கர் திருநக்ஷத்ரமஹோத்ஸவமும் அத்யாச்சர்யமான ஏற்பாடுகளுடன் கொண்டாடப்பட்டன. திருநக்ஷத்ரமஹோத்ஸவத்திற்கு ஸ்ரீமதழகியசிங்கர் ஸஞ்சாரம் செய்தருளின எல்லாவிடங்களிலிருந்தும் சிஷ்யர்கள் திரளாக வந்திருந்தார்கள்.

சில நாட்களுக்குப் பின் ஸ்ரீமதழகியசிங்கர் மறுபடியும் நாமக்கல்லுக்கு வந்து, முசிரி, குணசீலம் வழியாக ஸ்ரீரங்கம் தசாவதார ஸந்நிதிக்கு எழுந்தருளினார். அங்கிருந்து தஞ்சாவூர் ஜில்லாவில் ஸஞ்சாரத்தைத் துடங்கத் திருவுள்ளம் கொண்டு அப்பக்குடத்தானுக்கு எழுந்தருளியாயிற்று. அங்குள்ள பெருமாளை மங்களாசாஸனம் செய்துகொண்டு கோனேரிராஜபுரம் மார்க்கமாய் கல்யாணபுரம் அக்ரஹாரத்திற்கு எழுந்தருளியாயிற்று. அங்கு நான்கு நாட்கள் எழுந்தருளியிருந்தார். அவ்விடத்தில் (40–வது பட்டம்) ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ரங்கநாதசடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம் வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. அங்குள்ள ஸ்ரீநிவாஸப்பெருமாளையும், ஸமீபத்திலுள்ள திருக்கண்டியூரில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஹரசாபஹர

ஊேயும் (மூலவரான) பவிநாதனேயும் மங்களாசாஸனம் செய்தாயிற்று. அங்கிருந்து தில்லேஸ்தானம் எழுந்தருளி, அங்கு ஸமீபத்திலுள்ள பெரும்புலியூர் ஸ்ரீ ஸுந்தரராஜப்பெருமாளே, தில்லேஸ்தானத்திற்கு ஸ்ரீமதழகியசிங்கர் எழுந்தருளுவதை உத்தேசித்து ஸ்ரீரங்கத்திலிருந்து எழுந்தருளின தில்லேஸ்தானம் ஸ்வாமி ஸ்ரீ சடகோபராமாநுஜமஹாதேசிகனுடன் மங்களாசாஸனம் செய்தாயிற்று. அங்கிருந்து தஞ்சாவூர், வெண்ணாற்றங்கரை, திட்டை, அக்ரஹாரம், நெடுந்தெரு, பாபநாசம் வழியாகப் புள்ளபூதங்குடி, ஸ்ரீநரஸிம்ஹபுரம் எழுந்தருளினர். அங்கு ஸ்ரீ ஸந்நிதி ஆதினத்தைச் சேர்ந்த ஸ்ரீவல்வில்லி ராமனே மங்களாசாஸனம் செய்தருளினர். ஸ்ரீ நரஸிம்ஹபுரத்தில் இருக்கும் ப்ருந்தாவனங்களில் ஸ்ரீ அழகியசிங்கர்களேயும் ஸேவித்தருளினர். பிறகு ஆதனூருக்கெழுந்தருளி பெருமாளே மங்களாசாஸனம் செய்தருளியாயிற்று. அந்தக் கோயிலதிகாரிகள் ஸ்ரீ ஸந்நிதிக்கு இந்த ஸந்நிதியின் நிர்வாஹத்தை ஒப்பித்துவிடுவதாக விஜ்ஞாபித்து திருவுள்ளம் பற்றவேணுமென்பதாக ஸ்ரீ அழகியசிங்கரை ப்ரார்த்தித்தனர். ஸ்ரீ அழகியசிங்கரும் அவர்கள் ப்ரார்த்தனேக்கிணங்கி அக் கோயிலே ஸ்ரீஸந்நிதிக்கு அதீனமாக்கிக்கொண்டு அதில் செய்யவேண்டிய ஜீர்ணோத்தாரணுதிகளேச் செய்து திருவாராதனுதிகள் ஸரிவர நடப்பதற்கான ஏற்பாடுகளேயும் செய்தருளியாயிற்று. பிறகு கதாதரபுரம், புளியஞ்சேரி, சருக்கை மார்க்கமாக திருக்குடந்தைக்கு எழுந்தருளியாயிற்று. 42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹதிவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோபயதீந்த்ரமஹாதேசிகனல் ஆரம்பிக்கப்பட்ட (பதினன்காவது) ஸ்ரீ மாலோல

வித்வத்ஸதஸ்ஸும் திருநக்ஷத்ர மஹோத்ஸவமும் திருக்குடந்தையில் மிகவும் நேர்த்தியான முறையில் நடந்தேறின. அவ்வூர் ஸ்ரீ அஹோபிலமடம் புது முறையில் சீர்படுத்தப்பட்டுள்ளது. திருநக்ஷத்ரமஹோத்ஸவம் நடந்த காலத்தில் காணப்பட்ட சோபை கண்டுகளித்தவர்களின் மனத்தை விட்டு ஒருநாளும் அகலாது. இவ்வருஷம் ஸ்ரீ மாலோல வித்வத்ஸதஸ் முக்கிய தினமாகிய திருநக்ஷத்ர தினத்திலும், மறுதினமும் கூட நடத்தப்பட்டது. இங்கிருந்து புறப்பட்டு ஸஞ்சாரமாய் ஒப்பிலியப்பனை மங்களாசாஸனம் செய்துவிட்டு, தேரழுந்தூருக்கெழுந்தருளி, ஸ்ரீ ஆமருவியப்பனை மங்களாசாஸனம் செய்தருளியாயிற்று. அங்கிருந்து காளி, கோட்டூர், திருவழுந்தூர், திருபுவனம் மார்க்கமாய் பவுண்டரீகபுரம் எழுந்தருளி அங்கிருந்து நாச்சியார் கோயிலுக்கெழுந்தருளியாயிற்று. தஞ்சாவூர் ஜில்லாவில் ஸ்ரீ ந்ருஸிம்ஹனுக்கு ஆயிரக்கணக்கான சிஷ்யர்களும், ஏராளமான ஐச்வர்யங்களும் இருப்பதால் எல்லா க்ராமங்களையும் நேரில் கண்டு அநுக்ரஹிப்பதாய்த் திருவுள்ளம் பற்றியாகியிருக்கிறது.


தஞ்சாவூர் ஜில்லா ஸஞ்சாரம் முடிந்ததும் தென்னாற்காடு ஜில்லாவிலுள்ள அக்ரஹாரங்களையும், பிறகு தொண்டை மண்டலத்திலுள்ள அக்ரஹாரங்களையும் நேரே கடாக்ஷித்து மறுபடியும் ஸ்ரீ அஹோபிலத்துக்கும் எழுந்தருளி, பிறகு பாரதபூமியின் வடபாகத்தையும் தமது ஸஞ்சாரக்ரமத்தில் சேர்த்துக்கொண்டு ஆங்காங்குள்ள சிஷ்யர்களையும் பக்தர்களையும் அநுக்ரஹித்தருளத் திருவுள்ளம் பற்றியிருப்பது எல்லோருடைய பாக்யவிசேஷமே.



ஸ்ரீ அஹோபிலமடம் 41வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீவண்சட
கோப ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ம சடகோப யதீந்த்ரமஹாதேசிகன்.







ஸ்ரீ அழகியசிங்கரின் பட்டாபிஷேகம் (13-3-1953)


ஸ்ரீமதழகியசிங்கர் ஸஞ்சார ஆரம்பம். (திருவள்ளூர்)








பெங்களூரில் மைஸூர் ராசாங்க முதல்வகுப்பு மர்யாதை



43ம் பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் மைஸூர் விஜயம்



மதுரையில் ஸ்ரீ அழகியசிங்கரின் பட்டணப்ரவேசம்

Copies can be had of:-

*Principal*

*Sri Ahobila Mutt Sanskrit College,*

*MADURANTAKAM*

S. Ry.